1980 ஜூலை 28]

நிறைவேற்றப்பட்டு பாதி அப்படியே விட்டுவிடப்படுகிறது, இப்படி 2, 3 கேள்விகள் வந்தபோது நான் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படாத திட்டங்கள் என்ன என்ன என்று கேட்டு அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வியாகப் போட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும்.

குளித்தலை அரசினர் மருத்துவ மனை.

*வினா எண் 63—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) குளித்தலை அரசு மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி பிரசவ விடுதி கட்டவேண்டுமென்று மாவட்ட அதிகாரிகளால் அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று அரசு ஆணை எண் 812 இன் அடிப்படையிலே 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இது விரிவுபடுத்தப்பட்டது. இது இப்போது 3 லட்சம் பேர்களுக்குப் பயன்படுவதாக உள்ளது. அதற்காக மீண்டும் 100 எம். ஏ. எக்ஸ்ரே யூனிட்டும்

மற்ற வசதிகளும் செய்யப்பட்டன. 1979 ஆம் ஆண்டிற்குப் பிறகு அங்கே லேபர் வார்டு, ஆப்ரேஷன் தியேட்டர் எல்லாம் வேண்டுமென்பதாக அந்த டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர் வாயால் சொன்னார்களே தவிர எழுத்துமூலமாகச் சொல்லவில்லை. எழுதிக்கேட்டு அதைப்பற்றி விசாரித்திருக்கிறோம். அந்தக் குறிப்புகள் வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. ஏ.டி. கருப்பையா : மூன்று லட்சம் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய முறையிலே இந்த மருத்துவ மனை அமைக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த மக்களின் தேவைகளைக் கணக்கில் எடுத்து இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, மாவட்ட அதிகாரியிடத்திலே அந்தக் குறிப்புகளை எழுத்துமூலமாக அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அந்தக் குறிப்புகள் வந்தவுடன் விரைவிலே எல்லா வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இடைப்பாடி நகராட்சி மகப்பேறு இல்லம்.

*வினா எண் 64—திரு. இ, கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகராட்சி பொறுப்பி லுள்ள ''நகராட்சி மகப்பேறு இல்லத்திற்கு'' ஒரு பெண் மருத்துவர் நியமிக்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை பெண் மருத்துவர் அங்கு நியமிக்கப்படாமலிருக்க காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) அங்கு ஒரு பெண் மருத்துவர் முன்பே நியமிக்கப் பட்டுள்ளார். அப்பெண் மருத்துவர் சிறுகச்சிறுக பலமுறை தொடர்ந்து மருத்துவ விடுப்பில் சென்றதால் அதை உடனே நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டது.